## இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை – 2016

-----------------------------------------------------------------------------------------------

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 38(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2017 நவம்பர் 22 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

--------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகள் கணக்காய்விற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02**

I. ‘‘நவபிம களஞ்சியசாலை வளாகத்தில்’’ (Yard) களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 1,500 கிலோ கிராம் எடையுள்ள கழிவுப் பொருட்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

II. மெதுவாக நகரக்கூடிய மற்றும் காலாவதியான இருப்புக்களுக்காக ரூபா 3,048,557 தெரகையான ஒதுக்கம் 2013 ஆம் வருடம் முதல் எவ்வித மீளாய்வுமின்றி முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11**

ஐந்து நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 15,617,194 முழுத் தொகையினையும் நடந்துகொண்டிருக்கும் வேலையாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20**

மீளாய்வு ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த ரூபா 277,910,082 தொகையான மூலதன அளிப்புக்களின் மீதிகள் உற்பத்தி செய்யப்பட்ட சொத்துக்களின் வருடாந்தத் தேய்வினை அடிப்படையாகக் கொண்டு (ක්‍රමක්ෂය) தவணையடிப்படையில்) சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 45,000,000 ஆன மூலதன அளிப்புக்களில் மீண்டெழும் தன்மையிலான செலவினமான ரூபா 2,486,663 மாத்திரம் வருமானமாக கணக்குகளில பதிவு செய்யப்படவேண்டும் என்பதுடன் ரூபா 37,635,995 ஆன மூலதனச் செலவினங்களிற்காக (ක්‍රමක්ෂය தவணையடிப்படையில்) சீராக்கல் செய்ய வேண்டியிருந்தும் ரூபா 40,122,660 தொகை மொத்த மூலதன செலவினம் வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டுக் கொள்கையொன்றை அறிமுகப்படுத்தும்போது அது நிதி நிலைமையினை வெளிப்படையாக மற்றும் நியாயமாக காட்டுவதற்கு உதவுமொன்றாக இருத்தல் வேண்டும். அவ்வாறிருந்தும் கடன்பட்டோர்களுக்கான ஐயக் கடன்களை ஒதுக்கும்போது கடன்பட்டோரகளிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன்களுக்காக 05 வருடங்கள் வரையில் ஒவ்வொரு வருடத்திற்கும் 10% ஒதுக்கீடும் மற்றும் 05 வருடங்கள் பூர்த்தியடைந்ததும் 100% ஒதுக்கீடொன்றை மேற்கொண்டதன் காரணமாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டினுள் ரூபா 3,573,133 மேலதிக ஐயக்கடன் ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல வருடங்களாக கொடைகளாகக் கிடைக்கப்பெற்ற பெறுமதி குறிப்பிடப்படாத இருப்பு உருப்படிகளில் பெறுமதியைக் கணக்கிட்டு கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மறுமதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 67,437,864 தொகையான 07 நிலையான சொத்துக்களை வருடாந்த தேய்மானச் செலவின் அடிப்படையில் கணக்கிட்டதன் காரணமாக ஆண்டின் தேய்மானம் ரூபா 1,333,284 இனால் மேலதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) பிரதான அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் நிலையங்களை நடாத்துகின்ற 37 ஏக்கர் அளவிலான மொத்தக் காணிகளின் உரித்து சட்டரீதியாக கையேற்கப்படாமல் இருந்ததுடன் அதன் பெறுமதியை மதிப்பீடு செய்து கண்க்குகளில் பதியும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

(ஈ) கடந்த வருடத்தில் ரூபா 2,032,627 வருமானத் தன்மையிலான செலவினங்கள் அவ்வருடத்தின் இலாபங்களுக்கு எதிராக பதிவளித்தலுக்குப் பதிலாக ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்ததன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் அவ்வளவுகளில் மேலதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாரான கைத்தொழிலாளர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய மொத்த நிழுவைத் தொகை கைத்தொழில் குடியேற்றப் பிரிவின் அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடுகையில் ரூபா 16,268,718 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு காணி மற்றும் காணி மேம்படுத்தல் கணக்கு ஏடுகளின் மீதிகள் முறையே ரூபா 676,552,750 மற்றும் ரூபா 141,320,244 ஆகக் காணப்பட்டாலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குறித்த மீதிகள் முறையே ரூபா 767,367,687 மற்றும் ரூபா 50,156,899 ஆகக் கானப்பட்டதனால் முறையே ரூபா 90,814,937 மற்றும் ரூபா 91,163,345 தொகைகள் சரிசெய்யப்படாமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களில் சபையின் சொத்துக்களுக்கான மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆதன மதிப்பீடு தொடர்பாக தொழில்சார் தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2016 திசம்பர் 31 ஆம் திகதிக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் அட்டவனை மற்றும் ஒவ்வோர் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி தொடர்பான தகவல்கள் 2017 ஒக்டோபர் 30 ஆம் திகதி ஆகும் வரையில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ). 05 வருடங்கள் கடந்த பல்வேறுபட்ட கடன் கொடுத்தோர்களின் மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 3,072,949 தொகையான மீதி தொடர்பாக விவரமான அட்டவனையொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு ஆண்டின் இறுதிக்கு வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கவேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66,517,993 ஆகக் கானப்பட்டதுடன், அதில் 05 வருடங்கள் கடந்த மீதி ரூபா 39,436,868 மற்றும் 05 வருடங்கள் கடந்த ரூபா 28,955,811 கடன் கொடுத்தோர்களின் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்படாமல் கானப்படுகின்ற ஊழியர் கடன் மீதி ரூபா 743,533 ஆகக் காணப்பட்டது.

(இ) முன் கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 14,457,340 முற்பண மீதிகளில் ரூபா 8,022,004 மீதி 2014 ஆம் ஆண்டு தொடக்கம் ஒதுக்கீடொன்றாக குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சேதமடைந்த இரும்புகளின் கொள்வனவின்போது வழங்குனர்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 4,317,934 முற்பணத் தொகை 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தீர்க்கப்படாதிருந்தது.

(உ) 12 கைத்தொழில் குடியேற்றங்களில் தாபிக்கப்பட்டிருந்த 228 கைத்தொழில்களுக்கு கைத்தொழிலாளர்களிடம் வாடகையாக 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடவேண்டிய ரூபா 16,058,303 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்களுடனான தொடர்பு<br>---------------------------------------------------------------------------------<br>இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | இணங்காமைகள்<br>----------------------------- |
|---|---|
| (i) நிதிப் பிரமாணங்கள் 571(2) | 02 வருடங்கள் கடந்த ரூபா 2,767,275 தொகையான மீளச் செலுத்தவேண்டிய வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 757 | 2016 ஆம் ஆண்டுடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொருள் கணக்கெடுப்பிற்கு ஏற்ப அவதானிக்கப்பட்ட ரூபா ரூபா 395,754 மிகை மற்றும் ரூபா 332,028 குறைப் பெறுமதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணங்கள் 770 | 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் கணக்கெடுப்பின்போது உபயோகிக்க முடியாதவை என பெயர் குறிப்பிடப்பட்ட 38 பொருள் வகைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சபையின் நிதிசார் விளைவுகள் ரூபா 30,029,583 ஆன பற்றாக்குறையொன்று இருந்ததுடன், அதற்கு மறையொத்ததாக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 27,259,111 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 57,288,694 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீண்டெழும் மானியங்கள் ரூபா 10,750,000 இனால் மற்றும் விற்பனை மற்றும் சேவைகள் வருமானம் ரூபா 44,720,265 இனால் குறைந்தமை மற்றும் நிருவாகச் செலவினங்கள் ரூபா 29,945,023 இனால் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவுகளிலான வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டுடன் கடந்த மூன்று வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 84,728,727 தொகையாக இருந்த பற்றாக்குறை 2014 ஆம் ஆண்டளவில் மிகையாகி , 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 27,259,111 தொகையான மிகையொன்றாக வளர்ச்சியடைந்திருந்தும், மீளாய்வு ஆண்டினுல் அது ரூபா 30,029,583 பற்றாக்குறையாக வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறெனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை மீள சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 68,532,050 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டினுள் ரூபா 142,949,647 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1969 இன் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதான நோக்கங்கள் கைத்தொழிலை ஊக்குவித்தல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆக இருந்ததுடன், 19 கைத்தொழில் பேட்டைகள் மற்றும் 25 பிரதேச அலுவலகங்களும் உள்ளடங்கலான பொறியியல் தொழில்நுட்ப சேவைகள், சந்தைப்படுத்தல், இறப்பர் அபிவிருத்தி மற்றும் தோல் பொருட்களின் அபிவிருத்தி போன்ற துறைகளை உள்ளடக்கும் சபையின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) <u>விற்பனைப் பிரிவு</u>**

கழிவுப் பொருள் கருத்திட்டம், துணை ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்ளல்,கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல், லக்கம் மற்றும் லக் உற்பத்தி நிலையங்களில் விற்பனை வசதிகளை வழங்குதல், முயற்சியாளர்களுக்காக வரத்தக மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சிகளை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் என்பவைகள் விற்பனைப் பிரிவின் பணிகளாகும்.

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

I. கழிவுப் பொருட்களின் விற்பனை வருமானம் விற்பனைப் பிரிவின் பிரதான வருமான வழியொன்றாகக் காணப்பட்டாலும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 103,970,263 ஆகக் காணப்பட்ட அவ்வருமானம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 43,044.099 ஆக ரூபா 60,926,164 இனால் 59% ஆகக் குறைந்திருந்தது.

II. ‘‘லக் உற்பத்திகள்’’ விற்பனை நிலையத்தின் முன்னேற்றத்திற்காக எவ்வித செயற்திட்டங்களும் செயற்பாட்டுத் திட்டத்தில் உற்படுத்தப்பட்டிருக்கவலைலை.இதன் காரணமாக ‘‘லக் உற்பததிகள்’’ நிலையத்திலிருந்து 2016 அம் வருடத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட தரகுத் தொகை ஏறக்குறைய ரூபா 1,206 ஆக இருந்ததுடன், ‘‘லக் உற்பத்திகள்’’ விற்பனை நிலையம் 2017 ஏப்ரல் மாதம் முதல் மூடப்பட்டிருந்தது.

**(ஆ) பிராந்திய அபிவிருத்திப் பிரிவு**

இப்பிரிவினூடாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் உயர்த்துதல் மற்றும் சர்வதேச சந்தையை மையமாக வைத்து 47 நடவடிக்கைகளை திட்டமிட்டிருந்தன. அதில் 6 நடவடிக்கைகளில் எவ்வித முன்னேற்றத்தையும் பெற்றிருக்கவில்லை என்பதுடன் மேலும் 25 செயற்பாடுகளின் முன்னேற்றம் 2 வீதம் முதல் 25 வீதம் வரை குறைந்த வேறுபாட்டெல்லையில் கானப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிராமங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழில் முயற்சியாளர்களுக்கு விநியோகிக்கும் நோக்கில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,417,960 பெறுமதியான இருப்பு மற்றும் மீளாய்வு ஆண்டில் நேரடி விநியோகத்திற்கு என கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 774,416 பெறுமதியான இருப்பும் கணக்காய்வுத் திகதியான 2017 திசம்பர் 04 ஆம் திகதியாகும் போதும் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில் குடியேற்றங்கள்

---------------------------------------------

I. 1996 ஆம் ஆண்டு மற்றும் 2000 ஆண்டு தொடக்கம் 05 குடியேற்றங்களில் அனுமதியின்றிக் குடியேறியவர்கள் வசிப்பதன் காரணமாக 59 காணித் துண்டுகளில் கைத்தொழில்களை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 07 குடியேற்றங்களுடன் தொடர்பான 71 காணித் துண்டுகளை அபிவிருத்தி செய்து கைத்தொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

II. பத்தேகம கைத்தொழில் குடியேற்றம் அமைந்துள்ள காணி, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தான ஒரு காணி என்பதுடன் அதனைக் கையேற்பதற்காக 2007 ஆம் ஆண்டில் ரூபா 500,000 முற்பணமும் வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் நில அளவை நடவடிக்கைகளுக்காக ரூபா 15,576 உம் 2007 ஒக்தோபர் 05 ஆம் திகதி செழுத்தப்பட்டிருந்தும் குறித்த காணி சபைக்கு கையேற்கப்படவில்லை. அவ்வாரே கையேற்கப்படாத கைத்தொழில் குடியேற்றங்களான 1 ஏக்கர், 2 ரூட், 0.5 பர்சஸ் அளவிலான பத்தேகம மற்றும் 10 ஏக்கர் 29.2 பர்சஸ் அளவிலான பெலிஅத்த கைத் தொழில் குடியேற்றங்களை சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு ஈடுபடுத்தாத காரணத்தினால் தற்போது அக்காணிகள் மனித குடியேற்றங்களாக மாறியிருக்கின்றன.

III. சபைக்கு உரித்தான காலி கரந்தெனிய கைத்தொழில் குடியேற்றத்தில் 2 ஏக்கர் 1 ரூட் 11.6 பர்சஸ் அளவிலான காணியில் கைத்தொழிலாளர்கள் கைத்தொழில்களை நடாத்துவதை நிறுத்தி வதிவிற்காக உபயோகித்திருந்தார்கள். இக்காணிகளை உரித்திற்கு கையளிக்கும் செயன்முறைக்கு முரணாக பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றின் மேல் 2017 ஆகஸ்ட் 29 ஆம் திகதி கரந்தெணிய பிரதேச செயலாளருக்கு இக்காணியை கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**4.3 நிதி உபயோகம்**

---------------------------------------------

பானமுவ கைத்தொழில் குடியேற்றத்திற்கு காணிகளை சுவீகரித்துக்கொள்வதற்காக 2016 செப்டெம்பர் மாதத்தில் அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 25 மில்லியன் தொகை 2017 செப்தெம்பர் ஆகும் வரையில் சம்பந்தப்பட்ட விடயத்திற்கு உபயோகிக்காமல் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையை கணக்கீடு செய்யும்போது ஊழியர் ஊதியத்தில் உள்ளடங்கியுள்ள வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை கருத்தில் கொள்ளாததன் காரணமாக குறித்த காலத்திற்கு தண்டப்பணமாக ரூபா 6,469,791 தொகையை சபையினால் நிதியத்திற்கு செலுத்த வேண்டியேற்பட்டது.

**(ஆ)** வருடாந்த வாகன அனுமதிப்பத்திரக் கட்டனங்கள், பணிக்கொடை, மற்றும் ஆதன வரிக் கட்டணங்கள் போன்றவைகளை உரிய திகதிக்கு செலுத்தாததன் காரணமாக தண்டப்பணமாக ரூபா 43,257 செலுத்த வேண்டியேற்பட்டது.

**4.5 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ)** சபைக்கு உரித்தான மஹியங்கனை மியுனுகமவில் அமைந்துள்ள கட்டிடம் எவ்வித நடவடிக்கைகளுக்கும் உபயோகிக்காமல் காணப்படுவதோடு அதற்காக பாதுகாப்பு வசததிகளைப் பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வு ஆண்டினுள் ரூபா 714,248 செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ)** பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறு முயற்சியாண்மை அமைச்சின் கீழ் உற்பத்திக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுததுவதற்காக அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட நாகஹமட நீலவபெத்த கட்டடத்தில் பழங்கள் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்குத் தேவையான ரூபா 1,283,500 பெறுமதியான இயந்திராதிகள் சபையினால் வழங்கப்பட்டு 2012 மார்ச் மாதம் 06 ஆம் திகதி பொதுமக்களின் உபயோகத்திற்காக கையளிக்கப்பட்டிருந்தாலும், எவ்வித வினைதிறனான நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தாமல் உபயோகமின்றிக் காணப்படுகின்றது.

**4.6 பெறுகைச் செயன்முறை**

ரூபா 9,318,026 பெறுமதியான ‘‘இறப்பர் இன்ஜெக்ஷன் மோல்டின்’’ இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக முதலாம் விலை கோரலின் போது சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் கூடிய பெறுமதியாகக் கானப்பட்டமையினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. இரண்டாம் முறை விலை கோரலின் போது பெறுகை வழிகாட்டல் கோவையில் 7.8 மற்றும் 7.8.4 வழிகாட்டலுக்கு ஏற்ப விலைகோரல் முறியொன்றினை சமர்ப்பிக்காமை வெளியேற்றல் ஒன்றாக கருதப்பட வேண்டியிருந்தம் சபையின் பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 182,520 பெறுமதியான காசோலையொன்றின் நிழற்பிரதியொன்றை சமர்ப்பித்த வழங்குனரை வெற்றிகரமான விலைமனுதாரராக ஏற்று ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட 725 பதவிகளில் மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபையில் வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை 232 ஆக காணப்பட்டதுடன் அதில் 106 பதவிகள் நிறைவேற்று மட்டத்திலான பதவிகள் என்பதுடன் 126 பதவிகள் நிறைவேற்று மட்டத்தில அல்லாத பதவிகளாகும்.

(ஆ) ஆட்சேர்ப்பு முறைமைக்கு முரணாக 2015 டிசம்பர் 01 ஆம் திகதி முதல் 08 வியாபார மேம்பாட்டு உத்தியோகத்தர்களும், முகாமைத்துவ உதவியாளர் மூவரும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் ஒப்பந்தகாலம் 2016 மே மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தாலும் சேவையை நிறைவு செய்யாமல் மறு அறிவித்தல் வரை சேவைக் காலம் நீடிப்பு செய்ப்பட்டிருந்தது

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத ஒருங்கிணைப்பாளர் பதவி ஒன்றிற்காக 2016 சனவரி 20 ஆம் திகதி முதல் ஆளொருவரை ஆட்சேர்ப்பு செய்து மாதாந்தம் எரிபொருள் கொடுப்பனவு, சாரதி சமபளம், தொலைபேசிக் கட்டனம் உள்ளடங்கலாக ரூபா 83,069 செலுத்தப்பட்டிருந்ததுடன், மூன்று உசாவுனர்களை ஆட்சேர்ப்பு செய்து மாதாந்தம் ரூபா 168,800 கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடங்களுக்காக அலுவலர்களை நியமிக்காமை காரணத்தினால் 13 அலுவலர்கள் பதில் கடமையாற்றல் அடிப்படையில் நியமனம் செய்து பதில் கடமை சம்பளமாக 2016

ஆம் ஆண்டில் ரூபா 830,546 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இவ்வலுவலர்களின் பதில் கடமையாற்றல் கால எல்லை 02 வருடத்திலிருந்து 10 வருட கால எல்லைக்ககு வியாபித்திருந்தது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் வரைபு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 செப்டெம்பர் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பெறுகைகள் திட்டம்

அமைச்சு மற்றும் பொதுத்திறைசேரியினூடாக வழங்கப்படுகின்ற ஒதுக்கீடுகளுக்காக மாத்திரம் மீளாய்வு ஆண்டிற்கு பெறுகைத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. சபையின் வருமானங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகள் தொடர்பாக பெறுகைகள் திட்டமொன்று தயார்செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3 மற்றும் 5.2.4 பிரிவுகளின் பிரகாரம் மீளாய்வு ஆண்டிற்காக பாதீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

### 5.4 வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரிவின் பிரகாரம் 2013,2014 மற்றும் 2015 ஆம் வருடங்களிற்கான வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | (i) | வங்கி இணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது நீண்ட தாமதம் காணப்படுகின்றமை |
| | | (ii) | பல்வேறு பிரிவுகளில் நிதிக் கொடுக்கல் |

| | | |
|---|---|---|
| | | வாங்கல்கள் தொடர்பான ஆவணங்களை நிதிப்பிரிவிற்கு வினைதிறனுடன் சேகரிக்கப்படாமை |
| | | (iii) முற்பணங்களை வழங்கும்போது பணிகளுக்குத் தேவையான தொகையையும் விடக் கூடுதலாக முற்பணங்களை வழங்குதல் |
| | | (iv) சிறாப்பர் பிரிவில் நிதி பொறுப்பேற்றல் அலுவலக நேரத்தின் பின் மேற்கொள்ளுதல் மற்றும் காப்பகத்தில் வைப்புச் செய்தல் முறையாக மேற்கொள்ளப்படாமை |
| (ஆ) | காணிகளை குத்தகைக்கு வழங்குதல் | 09 கைத்தொழில் குடியேற்றங்களுடன் தொடர்பான 31 கட்டடங்களும் மற்றும் 57 காணித் துண்டுகளுக்கும் சட்டபூர்வமான குத்தகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடாமை |
| (இ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) மீதிகள் இல்லாத இருப்பு விடயங்களிற்காக இருப்பு ஏடுகளைப் பேணுதல். |
| | | (ii) சேதமடைந்த இருப்புக்களை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை |
| | | (iii) சில இருப்பு விடயங்கள் தொடர்பாக பேரேட்டு அட்டைகள் மற்றும் ‘‘பின் காட்’’ அட்டை மீதிகளுக்கிடையில் அசாதாரண நிலைமை காணப்படுகின்றமை. |